தகவல் அறிபும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590


## ஆணை நாள். 01.04.2026

## முன்னிலை
## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 0463/F/2024**

திரு.மி.மகிமைதாஸ், -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியம், -- பொது அதிகார அமைப்பு
கள்ளக்குறிச்சி மாவட்டம்-605 766.

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.04.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு.மி.மகிமைதாஸ், அவர்கள் ஆணையத்தின் முன் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி திரு.எஸ்.சீனுவாசன், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியம், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 27.09.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், “ தி.அத்திப்பாக்கம் ஊராட்சியில் கடந்த 2020-2021, 2021-2022, 2022-2023 நிதியாண்டுகளிலும் மற்றும் நடப்பு நிதியாண்டில் 2023-2024-ல் என்னென்ன திட்டங்களின் கீழ் பாராளுமன்ற, சட்டமன்ற, ஒன்றிய பொது நிதி போன்றவற்றில் என்னென்ன பணிகள், எங்கெங்கு நடைபெற்றுள்ளது அவற்றின் திட்ட மதிப்பீடு பணிகள் யாரால் செய்யப்பட்டுள்ளது என்ற அனைத்து விவரங்களையும் உரிய ஆதாரத்துடன் தகவலாக வழங்கவும்” என்பன போன்ற தகவல்களை 12 இனங்களில் வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியம், திருக்கோவிலூர் அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து தகவல்கள் வழங்காத காரணத்தால் மனுதாரர் 24.11.2023 தேதியிட்டு பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு

மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால், 10.01.2024 தேதியிட்டு பிரிவு 19(3)இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 01.04.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து ந.க.எண்.ஆ6/2527/2023, நாள் 19.01.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் இனம் வாரியாக ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதனை மனுதாரரும் பெற்றுக்கொண்டு ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலையும் இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனக்கு பொது அதிகார அமைப்பால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் முழுமையற்ற தகவல்களாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு உரிய, சரியான தகவல்கள் ந.க.எண்.ஆ6/2527/2023, நாள் 19.01.2024 மற்றும் 24.03.2026 தேதியிட்ட கடிதங்களின் வாயிலாக பொது அதிகார அமைப்பால் முழுமையான தகவல்கள் வழங்கியுள்ளதை இவ்வாணையம் உறுதி செய்து ஏற்று, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 0463/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-605 766.

**<u>மனுதாரர்</u>**

திரு.மி.மகிமைதாஸ்,
எண்.110, திருவண்ணாமலை ரோடு,
தி.அத்திப்பாக்கம்,
திருக்கோவிலூர்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-605 759.

Copy to: File NS/PA-